DEPOSITION OF WITNESS
(Chapter XXIII Code of Criminal Procedure)
IN THE COURT OF JUDICIAL MAGISTRATE, KARIAPATTI

| | | |
|---|---|---|
| Calender/ Miscellaneous | : | **CC.No.283/2025** |
| Deposition of witness for | : | PW.1 |
| Name | : | கவிதா |
| Father/Husband Name | : | |
| Village | : | |
| Taluk | : | |
| Caste | : | |
| Calling | : | |
| Religion | : | |
| Age | : | |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the 10th day June of 2026

**எதிரி தரப்பு குறுக்கு விசாரணை :–**

நான் எனது வீட்டில் வைத்து எதிரிக்கு பணம் கொடுத்த போது அதற்கு சாட்சியாக அப்போது யாரும் இல்லையென்றால் சரிதான். நான் எனது முதல் விசாரணையில் நான் எவ்வளவு ரூபாய் கையில் வைத்திருந்தேன் என்றும், எவ்வளவு ரூபாய் வங்கி கணக்கில் சேமித்து வைத்திருந்தேன் என்று குறிப்பிட்டு கூறவில்லை என்றால் சரிதான். நான் ஆவியூர் காவல் நிலையத்தில் புகார் மனு அளித்து அதற்கு காவல் துறையினர் விசாரணை செய்து என்ன தகவலை கூறினார்கள் என்பதை பற்றி நான் முதல் விசாரணையில் கூறவில்லை என்றால் சரிதான். நாங்கள் எங்கள் மகளுக்கு பூப்புனித விஷேசம் வைத்தோம். அதன் மறுநாள் எனது தம்பிக்கு எனது மகளை திருமணம் செய்து வைத்தோம் என்றால் சரிதான். திருமணம் முடிந்த 2 நாட்கள் கழித்து தான் எதிரிக்கு நான் கடன் வழங்கினேன் என்றால் சரியல்ல, திருமணம் முடிந்து 6 மாதம் கழித்து கடனை எதிரியிடம் வழங்கினேன். நாங்கள் இரண்டு விஷேசங்களை வைத்த

போது வந்த மொய் தொகையினை மொய் எழுதிய நோட்டை பார்த்தால் உண்மை நிலவரம் தெரிய வரும் என்றால் சரிதான். நான் வங்கியில் தாக்கல் செய்த Challan ஐ நீதிமன்றத்தில் தாக்கல் செய்யவில்லை என்றால் தாக்கல் செய்த Challan ஐ என் வசம் வைத்துள்ளேன். எதிரி பஞ்சாயத்து தலைவராக இருப்பதால் எனக்கும், அவருக்கும் ஏற்பட்ட அலுவலக சண்டையை மனதில் வைத்து கொண்டு எதிரி மீது பொய்யாக வழக்கு தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரியல்ல. எதிரி எனக்கு கடனுக்காக மேற்படி காசோலையை தரவில்லை என்றும், அலுவலக ரீதியாக கொடுத்த காசோலையை வைத்து நான் அவர் மீது இந்த வழக்கை தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரியல்ல. எனக்கு ரூ.20 லட்சம் கடன் கொடுக்கும் அளவிற்கு வருமானம் இல்லை என்றும், அவ்வாறு எனக்கு வருமானம் இல்லாத காரணத்தினால் என்னால் எதிரிக்கு மேற்படி தொகையை கடனாக கொடுத்திருக்க வாய்ப்பில்லை என்றால் சரியல்ல. எனக்கு ரூ.20 லட்சம் கடன் கொடுக்கும் அளவிற்கு வருமானம் இல்லை என்றும், அவ்வாறு எனக்கு வருமானம் இல்லாத காரணத்தினால் தான் காவல் துறையினர் நான் அளித்த மனுவிற்கு எந்தவித நடவடிக்கையும் எடுக்கவில்லை என்றால் சரியல்ல. எதிரிக்கும் நான் வேலை செய்யும் யூனியன் செய்யும் ஆபிஸிற்கும் பிரச்சனை ஏற்பட்டதால் என்னை வைத்து எனது அலுவலகத்தில் பொய்யாக வழக்கு தாக்கல் செய்துள்ளார்கள் என்றால் சரியல்ல. எதிரிக்கும் இந்த வழக்கிற்கும் சம்மந்தமில்லை என்றால் சரியல்ல.

**மறுவிசாரணை**

இல்லை